1973 மார்ச் 15]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த வளர்ப்புக் குட்டைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு குட்டை கட்டுவதற்கு ரூ. 2 லட்சம் செலவிடப்படுகிறது. இயற்கையாக இருக்கின்ற ஏரிகளில் மீன்களை விட்டு வளர்க்கும் முறை சரியான முறையாக இல்லை. நமக்கு லாபம் தரும் வகையில் அங்கே குஞ்சுகள் சரியாக பராமரிக்க முடியாது என்பதால்தான் அரசாங்கம் குட்டைகளின் மூலம் மீன் வளர்ப்புச் செய்யும் முறையைக் கையாளுகிறது. சின்னம் சிறு குட்டைகள் ஊராட்சி மன்றங்களால் பராமரிக்கும் குட்டைகள் நல்ல முறையில் இருக்கின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி ஆவணியாபுரத்தில் பெரிய டாங்க் இருக்கிறது. தற்சமயத்தில் அது பெரிய பிஷ்ஷிங் பாயிண்ட் இல்லை என்றாலும், அதை அபிவிருத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய 3 மாவட்டங்களில் பிஷ்ஷிங் டாங்க் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அங்கே பிஷ்ஷிங் டாங்க் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீலகிரியில் பெரிய மீன் பார்ம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறது. ஜப்பான் வகை மீன் வளர்க்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. சேலத்திற்கான விவரம் இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : கிராமப் புறங்களிலே இருக்கின்ற எங்களுக்கு எல்லாம் சுறு, வஞ்சிரம் போன்ற மீன் வகைகள் கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே இருக்கின்ற குட்டைகளில் அம்மாதிரியான மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதிலே வஞ்சனை வளர்க்க வேண்டாம். வஞ்சிரம், சுறு, மீன் வகைகளில் கடலிலே உள்ளவை. அவைகளைக் குட்டைகளில் வளர்க்க முடியாது. கட்லாத்தி, கெண்டை போன்ற மீன் வகைகளைத்தான் குட்டைகளில் வளர்க்க முடியும்.

திரு. த. சோனையா : மதுரை மாவட்டத்திலே மீன் வளர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். மதுரை நகரில் தெப்பக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அதிகமான மீன்கள் அதில் வளர்க்கப்பட்டன.............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதுரை நகரில் தெப்பக்குளம் என்று ஏதோ புதிதாக மர்ம நாவல்களில் வருவதுபோல் சொல்ல வேண்டாம். மதுரையும், அங்கேயுள்ள தெப்பக்குளமும் எல்லோருக்கும் தெரிந்தது தான். அதனால் மதுரை தெப்பக்குளம் என்று நேரடியாகவே சொல்லுங்கள்.

திரு. த. சோனையா : அங்கே அதிகமான மீன்கள் வளர்க்கப்பட்டன. அந்த மீன்களை ரசிப்பதற்கு சில ரசிகர்கள் மாலை வேளைகளில் பொழுது போக்கிற்காக அங்கே சென்று வருவார்கள். இப்போது அங்கே மீன் வளர்க்கப்படவில்லை. அந்த ரசிகர்களின் திருப்திக்காக மீண்டும் மீன் வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தெப்பக்குளத்திலே சில சமயங்களில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. அதனால்தான் அங்கே மீன் வளர்க்கும் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இந்த ஏரி, குட்டைகளில் மீன்களை வளர்ப்பதைப் போலவே கோயில் வாயில்களி லுள்ள நீர்நிலைகளிலும் மீன்களை வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போதும் குற்றாலம் போன்ற கோயில் குளங்களில் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் அவைகளை பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. யாரும் பிடிப்பதற்கு முன்வரவும் இல்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : எங்கள் பகுதியில் உள்ள ஏரிகளில் மீன் வளர்க்கிறார்கள். பிறகு அந்த மீன்களைப் பிடிப்பதற்காக ஏரிகளை கூடிய விரைவில் வடிய வைக்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைப் பற்றி அரசுக்கு தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பகுதி எது என்றே நீங்கள் சொல்லவில்லையே. எங்கே, என்ன என்று தெரியாமல் எப்படி பதில் சொல்ல முடியும் ?

திரு. ரா. ரா. முனுசாமி : வடாற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் டாமில் மீன் வளர்க்கப்படுகிறது. அந்த மீன் வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களுக்குப் போதவில்லை. ஆகவே, பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் துறைகளுக்குச் சொந்தமான ஏரிகளிலும் மீன்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது கூட பி.டபிள்யூ. டி., பொறுப்பிலே இருக்கின்ற குட்டைகளிலும், ஏரிகளிலும், மீன் வளர்ப்பு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத் தில் ஜிலேபி கெண்டை என்ற மீன் அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் அது ருசியாக இல்லை. ஆகவே, அதன் ருசியை அதிகப்படுத்த முயற்சி செய்யப்படுமா ?